தினத்தந்தி

# இன்று ஈரோடு உருவான நாள்

ஈரோடு தனி மாவட்டமாக உதயமாகி 34 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், ஈரோடு என்ற பெயருடன் நகர் உதயமாகி 140 ஆண்டுகள் இன்றோடு நிறைவு பெறுகின்றன.

கோவை மாவட்டத்துக்கு உள்பட்ட பெருந்துறை தாலுகாவுக்கு உள்பட்ட கிராமமாக இருந்த ஈரோடு, 1871 -ம் ஆண்டு ஈரோடு நகரமாக மாறியது. 16-9-1871-ல் தான் ஈரோடு நகர பரிபாலன சபை அமைக்கப்பட்டது. ஈரோடு மாநகரின் வளர்ச்சிக்கு கால்கோள் நடத்திய இந்த நாளினைத்தான் ஈரோடு நாள் என்று நாம் கொண்டாடி, ஈரோட்டின் பெருமையை, இந்த நகரம் கடந்து வந்த பாதையை நினைத்துப்பார்ப்போம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே ஈரோட்டில் மக்கள் கூடி வாழ்ந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. இதற்கு அத்தாட்சியாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பல சின்னங்களை கண்டறிந்து உள்ளனர்.

கி.பி.922-ம் ஆண்டு பராந்தக சோழன் என்ற அரசன் கட்டிய பள்ளிகொண்ட பெருமாள் கோவில்தான் இன்றும் நமது கோட்டையில் உள்ள கஸ்தூரி அரங்கநாதர் பெருமாள் கோவில் என்பதும், கி.பி.942-ம் ஆண்டில் வீரசோழ பெருமானடிகள் மகிமாலய இருக்குவேள் என்பவர் கட்டிய மகிமாலீசுவரர் கோவில்தான் ஈரோடு பன்னீர் செல்வம் பூங்கா அருகில் உள்ள டி.வி.எஸ். வீதியில் அமைந்து உள்ளது என்பதும், ஈரோடு எத்தனை பழைய காலத்திலேயே பெருமை மிக்க நகரமாக இருந்திருக்கிறது என்பதற்கு சான்றாகும். ஈரோடு நகரை சோழர்கள், மூவேந்த சோழச் சதுர்வேதி மங்கலம் என்று பெயரிட்டு அழைத்து உள்ளனர். அத்துடன் ராஜராஜ பெருந்தேரு என்ற பெயரில் பெரிய அளவிலான ஒரு நிரந்தர சந்தையையும் சோழர்கள் தொடங்கி உள்ளனர். இங்குள்ள கோவில்களை நிர்வாகம் செய்வதற்கு என்று சமய மந்திரியும் நியமிக்கப்பட்டு உள்ளார். சேரர், சோழர், பாண்டியர் என மூவேந்தர்களும், போசாளர், விஜயநகர அரசர், மதுரை நாயக்கர், மைசூர் உடையார் என புகழ்பெற்ற மன்னர்களின் கல்வெட்டுகள் ஈரோட்டில் உள்ளன.



உலக பாலங்கள் என்ற புத்தகத்தில் இடம் பெற்று உள்ள காலிங்கராயன் கால்வாய்ப் பாலம்.

இப்படிப்பட்ட ஈரோட்டுக்கு இன்னும் பெருமை சேர்ப்பது காலிங்கராயன் கால்வாய். கி.பி.1282-ம் ஆண்டு வெட்டி முடிக்கப்பட்ட இந்த காலிங்கராயன் கால்வாய், பவானி -நொய்யல் ஆறுகளை இணைக்கும் கால்வாயாக உள்ளது. ஆறுகள் இணைப்புக்கு முன்னோடி திட்டமாகவும் இந்த காலிங்கராயன் கால்வாய் உள்ளது. இங்கு காலிங்கராயன் கால்வாய் பாய்ந்து செல்லும் வழியில் பெரும்பள்ளம் ஓடை குறுக்கிடுகிறது. அந்த காலத்திலேயே பெரும்பள்ளம் ஓடை கீழாகவும், காலிங்கராயன் கால்வாய் மேலாகவும் தண்ணீர் கலக்காமல் செல்லும் வகையில் காலிங்கராயன் கட்டிய பாலம் உலக பாலங்கள் என்ற புத்தகத்தில் இடம் பெற்று இருப்பது ஈரோட்டு மக்களுக்கு கிடைத்து உள்ள பெருமையாகும்.

மைசூர் உடையார் கண்டீவ நரச ராஜாவின் தளவாய் ஹம்ப ராசய்யன் எனபவர் திருமலை நாயக்கரின் படை வீரர்களின் மூக்குகளை அறுத்து விரட்டிய மூக்கறுப்பு போர் நடந்த இடம் ஈரோடு. ஈரோட்டில் முதல் ரெயில் 12-5-1862-ல் ஓடியது. 1901-ம் ஆண்டு ஈரோட்டை புயல் தாக்கியது. 1927-ம் ஆண்டு காந்தியடிகளுக்கு முதல் உருவச்சிலை ஈரோட்டில்தான் அமைக்கப்பட்டது. இந்த சிலையை விஸ்கவுண்ட் கோஷன் என்ற ஆங்கிலேய கவர்னர் திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1921-ம் ஆண்டு காந்தியடிகள் ஈரோடு வந்து தந்தை பெரியாரின் வீட்டில் தங்கி இருந்தபோது தான் பெரியாரின் மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாவும் கள்ளுக்கடை மறியலுக்கு வித்திட்டனர்.

அதே ஆண்டில்தான் பாரதியார் ஈரோட்டுக்கு வந்து கருங்கல்பாளையம் மற்றும் காரைவாய்க்காலில் அவருடைய இறுதி பேருரையை ஆற்றினார். பெருமை, மத ஒற்றுமை என்று அனைத்து விதத்திலும் பெருமை மிகு மாநகரமாக திகழும் ஈரோடு மாநகரை சேர்ந்த அனைவரும் இன்று ஈரோடு நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும்.

அதே நேரம் ஈரோடு மாநகர் மாவட்டம் மட்டுமின்றி ஈரோடு மாவட்டத்துக்கே பெருமை சேர்த்து வரும் காலிங்கராயன் வாய்க்கால் சாக்கடையாகி, கழிவுகளின் கால்வாயாக மாறிப்போனதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஈரோடு என்று இந்த மாநகருக்கு பெயர் வர காரணமாக இருப்பதாக கூறப்படும் ஓடைகளின் இன்றைய நிலை என்ன? அவற்றை மீட்க நாம் என்ன செய்யப்போகிறோம் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த ஈரோடு நாளிலாவது அதை எண்ணிப் பார்த்து ஈரோடு நாளை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்.

இந்த தகவலை புலவர் செ.ராசு தெரிவித்துள்ளார்.